# இலக்கியத்தில் மனிதநேயக்கூறுகள்

**பா. அய்யாசாமி**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத்துறை
தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை, தமிழ் நாடு, இந்தியா
(அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**முனைவர் து. கார்த்திகேயன்**

தமிழ் உயராய்வுத்துறை
தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை. தமிழ் நாடு, இந்தியா
(அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

***Editorial history***

**Received:** 25.12.2024
**Accepted:** 27.01.2025
**Published Online:** 10.02.2025

***Cite this article***

Ayyasamy, P., & Karthikeyan, T. (2025). Humanitarian Elements in Literature. *Journal of Advanced Research and Innovation, 1*(2), 5-9.

https://doi.org/10.5281/zenodo.19690048

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் என்பது நமது முன்னோர் வாழ்வியலான அப்போதைய வாழ்க்கைச் சூழல், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை நாம் அறிந்துக்கொள்ள உதவும் ஓர் ஊடகம்.
அக்காலத்தில் வாழ்ந்த மக்கள், மக்களின் தேவைகளுக்குத் தகுந்த செயல்களைச் செய்வதே சரியான வழிமுறை என்றும், மாறுபட்டு வாழ்ந்தவர்கள் மாண்பில்லாதவர்கள் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். இதிலிருந்து உயிர்கள் மீதான அவர்களது நேயம் என்பது மனித இயல்பாகவே இருந்ததை நாம் அறிய முடிகிறது. சமூக அமைப்பானது திணை நிலையினைக் கொண்டு பாகுபடுத்தப்பட்டது அகத்தில் வாழ வேண்டிய முறையினையும்,புறத்தில் போர் புரிவதற்கான ஒழுக்க முறைகளையும் வகுத்து மக்களை நல்வழிப்படுத்தினர். ஒத்தக்கருத்துடைய மக்கள் ஒரு கூட்டமாக வாழ்ந்து வந்தனர், அதனை நாம் சமூகம் என்றோம். அச்சமூகத்திற்குள் ஏற்றத்தாழ்வுகள் இல்லை, போட்டி பொறாமைகள் இருந்ததில்லை, எல்லாம் எல்லோருக்கும் என்ற உயர்ந்த பண்பாடு இருந்ததைக்காண முடிகிறது. மனித உயிர்களைப்போலவே பிற உயிரனங்களையும், மரஞ் செடிகொடிகளையும் நேசித்தே வாழ்ந்தனர்.
தனக்கெனவும், நாளை, நமக்கு என கேள்வி மனத்தில் எழுந்ததன் விளைவு, சுயநலத்தால், பேராசை ஏற்பட, மனமானது கெட்டு, தனிமனித ஒழுக்கம் பாதித்ததன் விளைவு மனிதனை மனிதன் நேசிப்பது என்பது தனி ஒரு மனிதனின் பண்பாக மாறிவிட்டது. எப்படியிருந்த நாம் ஏன் இப்படி மாறிப்போனோம் ஏன் இந்த மாற்றம் நிகழ்ந்தது? என்பதே இவ்வாய்வின் சுருக்கம்.

**கலைச்சொற்கள்: சமூகம், மனிதநேயம், சங்கக்காலம், மக்கள், ஒழுக்கம்**

**முன்னுரை**

இயற்கையின் அல்லது இறைவனின் ஆகச்சிறந்த படைப்பு மனிதன். ஒருவரிடமிருந்து மற்றவர் வேறுபடுவது மனிதன் தனது இயல்புகளினாலே. ஏதுமறியாத குழந்தைப் பருவத்தில் ஆசையேதும் மனத்தில் உதிக்காதவரை சந்தோசமாக,மகிழ்ந்து மகிழ்விக்கும் மனிதன், தான் சுயம் என உணருகின்றபோது, தனக்கெனத் தேவைகள் மனிதனுக்கு விருப்பமானதும்,சந்தோசம் அளிப்பதும்

சுயம்தான். அதில்தான் மனிதனுக்கு ஈர்ப்பு இருகின்றது. வாழ்வே இருக்கின்றது. மனிதர்களை நேசிக்க எளிய புரிதல் ஒன்று தேவைப்படுகிறது.

தனக்கு வேண்டியவர்களை தன்னைப்போல் மாற்ற நினைக்காமல் அவர்களை அவர்களின் தனித்தன்மையோடு ஏற்றுக் கொள்ளும் பொழுது வாழ்வு ரசனையாக மாறிவிடுகிறது.

ஒவ்வொரு உதயமும் இப்படித்தான், ஒவ்வொரு பூவும் அப்படித்தான், ஒவ்வொரு மனிதனும் அப்படித்தான், என்ற புரிந்துணர்வு வாழ்விற்கு புதிய அர்த்தத்தை ஏற்படுத்துகிறது. வாழ்வை ஏற்றுக்கொள் இப்படியே என்பது மனிதர்களை ஏற்றுக் கொள் என்பதன் மாற்று விளக்கம்தான்.

நாமே நம்மை முழுதாய் நேசிக்க முடிகிறதா? நாம் நினைப்பது போல் எப்பொழுதும் நம்மால் இருக்க முடிகிறதா ? நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு மனிதனும் தனித்தன்மை கொண்டவன்' வித்தியாசமானவன்' இப்படித்தான் என்று எல்லைக்குள் நிற்காதவன். முழு நல்லவர் என்று எவரும் இல்லை, முழுவதும் கெட்டவர் என்று யாருமில்லை. நல்லது கெட்டது என்று நம் பார்வையே எப்பொழுதும் ஒன்று போல் இருப்பதில்லையே. இத்தகைய மனித நேயச் சிந்தனைகளை இலக்கியத்தின் துணைக்கொண்டு தி.ஜா படைப்புகளில் காண முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**சங்ககாலமும் மனித நேயமும்**

பண்பாட்டிலும்,நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய தமிழர்களை மூத்த குடிமக்கள் என்று சான்றோர்கள் போற்றுகின்றனர். **கல் தோன்றி மண் தோன்றா காலத்தை வாளோடு முன் தோன்றிய மூத்த குடி** (1) என்பதனால் இதனை அறியலாம்.

செல்வ நிலையில் இருந்து தடுமாறிய போதும் மற்றவர்களைப்பற்றியும் சிந்தித்து செயல்பட்டனர் இந்த பண்பானது ஒரு தலைமுறையில் தோன்றியது அன்று. வாழையடி வாழையாக வந்ததாகும். இவ்வாறாக இருந்த நம்முடைய சமூகமானது பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கி இன்றளவும் நிலைத்து நிற்கின்றது. இதற்கு சங்க இலக்கியங்களே நமக்கு வழிகாட்டுகின்றன.

**ஈதல்**

கல்வி, கேள்வி, பொருள் என பல வகையாக விரிந்து நிற்கக் கூடியது செல்வம். இருப்பினும்,

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**

**வேளாண்மை செய்தற் பொருட்டு** (2) பிறருக்கு உதவும் பொழுதுதான் செல்வமானது அதன் பயனை அடைகிறது என்கிறார் வள்ளுவர்.

**கொல்லாமை**

நம்மைவிட மெல்லிய உயிர்களிடம் காட்டும் அன்பினால் அருள் பிறக்கும். பின்னது வையகம் அளவில் வளரும், முடிவில் அது கொல்லாமை என்ற உயிர் மீது அன்பில் வளர்ந்து நிற்கும் என வள்ளுவர் கூறுகிறார்.

**மெல்லிய உயிர்களை மதித்தலும், பரிவுகாட்டலும் உண்ணாதிருத்தலும் அருளை பெறுவதற்கு எளிய வழியாகும்** என்பது வள்ளுவர் கருத்து. மேலும் உண்ணக்கூடிய மெல்லிய உயிர்களைக் கொன்று தின்று கொண்டே இருந்தால், முடிவில் நாமும் மெல்லிய கிருமிகளுக்கு உணவாக மாறுவோம் என எச்சரிக்கிறார்.

**எதிர்பார்ப்பில்லாத உதவி**

**கண்ணுறு விழுமம் கைபோல் உதவி** (3) என்ற நற்றினை அடி உரைப்பதுபோல, கண்ணிற்கு ஏதாவது துன்பம் என்றால், கை யோசிப்பதில்லை விரைந்து சென்று துயர் நீக்கும்.மனிதநேயம் என்பதும் இதைப் போன்றதே. தனக்கு ஏற்படும் நன்மை, தீமைகளைக் கருதாது, எதிர் இருப்போரின் நன்மை ஒன்றையே கருத்தாகக் கொண்டது. அவர்தம் தீமை களைய முனைவது. மனிதநேயப் பண்புகள் என்பது, நாம் அரிதின் முயன்று உருவாக்க வேண்டிய ஒன்றன்று.

**ஆன்றோர் செல் நெறி வழா அச்**
**சான்றோன் ஆதல் நற்கு அறிந்தனைதெளிமே (4)**

என்ற அடிகளின் கருத்தைப்போல, நல்லோர் காட்டிய நல்வழிகளில் வாழ்ந்தாலே, மனிதநேயப் பண்புகள் மலர்ந்து மக்களிடையே மணம் பரப்பும் என்பது தெளிவு.

**தொண்டு**

அன்பு செலுத்துவதோடு மட்டுமின்றி பிறருக்குச் சேவை செய்வதே சிறந்ததாகும். சேவை மனம் படைத்தவர்கள் பிறருக்குத் தொண்டு செய்வதை பாரமாக நினைப்பதில்லை. சைவ சமயத்தில் மக்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்கே செய்யும் தொண்டு என்பர். இதன் சிறப்பை பெரிபுராணம் காட்டும்.

**வடிவு தாங் காணாராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்**
**அடிமையும் தம்பிரானார் அருளும் கேட்டவர் நாமத்தால்**
**படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாயுள்ள**
**முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில் (5)**

அப்பூதியடிகள் மடங்கள் பல கட்டினார், தண்ணீர் பந்தர்கள் அமைத்தார், கிணறுகள் பல தோண்டினார், சாலைகளும் சோலைகளும் நிறுவினார் அவ்வாறு தான் அமைத்தன யாவுக்கும் திருநாவுக்கரசர் மடம், திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தர் என்பது போன்று தான் போற்றும் திருநாவுக்கரசர் திருநாமத்தையே சூட்டினார். இவ்வாறு சங்க காலம் தொட்டு பக்தி இலக்கிய காலம் வரை மக்கள் அறத்தோடே வாழ்ந்தனர் என்பதற்கான சான்றுகள் இலக்கியங்க்ளின் வழி மிகுதியும் காணப்படுகின்றன.

**தி.ஜானகிராமன் சிறுகதைகளில் நேயம்**

பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய தமிழர்கள் சுயநலத்தாலும், காலத்தின் வேகத்தினாலும், சமுதாய அழுத்தத்தினாலும், தனிமனித ஒழுக்கச் சிதைவினாலும், போட்டி, பொறாமை என்று சுயநலம் சார்ந்த பண்புகள் அதிகரித்தாலும் மெல்ல மெல்ல மனிதப்பண்புகள் குறைந்து சுயநலமே முக்கியம் என்ற கொள்கை வளர்ந்து வந்த காலகட்டம் அது.

தி.ஜாவின் சிறுகதைகளிலே இருவேறு கதாப்பாத்திரங்கள் மூலம் மனித நேயம் குறைவதையும், அதே பண்பு மேலோங்கியிருப்பதையும் காட்டும் கதைகளைக் காணலாம்

**தீதும் நன்றும்**

எளிய மனிதரான தேசிகரிடம் குறைந்த விலைக்கு நிலம் வாங்கித்தருவதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றித் தொகையினைப் பெற்றுக்கொண்ட ராமதாஸ்,தனது கடனையெல்லாம் அடைத்துவிட்டு தலைமறைவாகி விடுகிறார். கோர்ட்,கேசு என அலைந்த சுந்தர தேசிகர் நீண்ட காலத்திற்குப்பிறகு ஊருக்குத் திரும்பிய ராமதாஸ் நோய்வாய்ப்பட்டு படுத்தப்படுக்கையாக கிடக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு அவருக்காக மனம்வருந்தி, உன்னைப்போல் கெட்டிக்காரனை நான் பார்த்ததே இல்லை, நீ இப்போது முடியாமல் இருக்கே, கேசு யாருக்கு ஜெயிச்சா என்ன? கடனோடு இறக்கக் கூடாது அது பாபம் என சாஸ்திரங்கள் சொல்கிறது. உன்னிடம் உள்ளதை, முடிந்ததைக்கொடு அஞ்சு ரூபாயோ, ஒரு ரூபாயோ கொடு, நான் பெற்றுக்கொண்டு லோக மாதா ஆணையா **கடன் தீர்ந்தது** என சொல்லிபுடறேன் எனக் கூறும் தேசிகர், **பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே** (6) என தனக்கு துரோகமே செய்திருந்தாலும், பிற உயிரின்பால் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தியிருப்பார் ஆசிரியர் தி.ஜா.

**வெறுப்பும் விருப்பமும்**

**வயிறு காயிறதே** இன்றைக்காவது கருணை காட்டி ஒரு தனவானை வீட்டிற்கு அனுப்பி வை என துர்க்கை ஆலயத்தில் வேண்டும் விலைமகள் தருமுவை காண நேரிட்ட கதை சொல்லி, அவள் இறப்பினால் கோபுர விள்க்கு அணைக்கப்பட்டு வீதி முழுவதும் இருளில் மூழ்கியிருப்பதை அறிந்து ஆலயத்திற்குச்சென்று அவர்களோடு சேர்ந்து நல்லடக்கம் செய்ய முயல்வதும், அவளின் இந்த நிலைக்கு காரணமாகவிருந்த சமூகம், இறந்த பின்பும் உதவிக்கு வராத சமூகத்தின் மீதான கோபத்தில் **ஒரு நாள் இருளில் கிடக்கட்டும்** என்று கோபுரவிளக்கு எனும் கதையின் மூலம் மனிதத்தின் மீது வெளிச்சம் அடித்துக் காட்டுகிறார் தி.ஜா.

**பொறாமையும் பொறுமையும்**

பொறாமை எனும் தீயில் விழுந்து கருகிக்கொண்டிருக்கும் சாமிநாது, சித்தப்பா சாமிநாது மீது பாசத்தை மட்டும் காட்டுபவராக சுப்பராயன்.

தான் உழைத்துச் சம்பாதித்ததை அவரது குடும்பத்திற்கும் வழங்கி பாதுகாத்து வருபவர். சுப்ராயன் அடைந்திருக்கும் உயரம் அவருக்கு எரிச்சலை தருகிறது, அவன் தன் பெண்ணுக்கு விமரிசையாக நடத்தும் திருமணம் எரிச்சலைத் தருகிறது. எவ்வளவுதான் அவனை அவமதித்தாலும் சுப்புராயன் அவருக்குத் தரும் மரியாதை எரிச்சலைத் தருகிறது.

சாமிநாது பல வசை வார்த்தைகளைக் கொட்டினாலும், தனது மகளின் திருமணத்திற்குத் தயார் செய்த பாயசத்தை கீழே கொட்டினாலும், தனது அன்பால் அவரை எதிர்கொள்ளும் கதாபாத்திரம். அவர்தான் முன்னின்று மகள் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும் என்கிறான் இக்கதையின் நாயகன். ஒவ்வொரு வரியிலும் இடம் பிடித்திருக்கும் அழுக்கு மனிதரான சாமிநாது அல்ல, இதற்கு கூட அவரைக் கோபித்துக் கொள்ளாமல் இருக்கப்போகிற சுப்புராயன்தான் என்பதை ஊஞ்சலுக்கு வாசிக்கும் நாயண்ம் வழியாக மனிதமாண்பை உணர்த்தி பொறுமையின் உச்சம் தொட்டிருப்பார் ஆசிரியர்.

**மலர்ந்த மனிதம்**

கதையில் ஒரு எழுத்தாளர்-வாத்தியார் வறுமையின் காரணமாக இன்னொருவருக்கு கோஸ்ட் ரைட்டிங் (பிறருக்காக தொகை வாங்கிக்கொண்டு எழுதுவது) செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். அத்தோடு இவரை ஏமாற்றுவதாக சொல்லவே இந்தப் படியை இனி மிதிப்பேனா என்று சூளுரைத்துவிட்டு சரவண வாத்யார் வந்துவிடுகிறார்.

அவர் குழந்தைக்கு ஜுரம் வந்துவிடுகிறது. கையில் பைசா இல்லை. வேறு வழியில்லை. சூளுரைத்த படியையே நொந்துகொண்டு மறுபடியும் மிதிக்கப் போகிறார். அங்கே போனால் ஏமாற்றியவர் மனைவி திடீர் சுகக்கேடு வந்து சாகக்கிடக்கிறார். டாக்டர்கள் யாரும் வர மறுக்கிறார்கள். இவர்தான் அங்குமிங்கும் சைக்கிளை எடுத்துக்கொண்டு திரிந்து ஒரு டாக்டரைக் கூட்டிக்கொண்டு வந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கிறார். பெண்மணி பிழைத்துக் கொள்கிறார். பிழைத்துக்கொண்டதும் இவரை எல்லோரும் மறந்து விடுகிறார்கள். கையிலுள்ள காசையும் செலவு செய்த வாத்தியார் நடந்தே வீடு வந்து சேர்கிறார். வழியில் புல்லைத்தின்று பசியாறும் ஒரு குதிரைப்பட்டினியாக அலையும் இவரைப் பார்த்துச் சிரிக்கிறது. .இவரும் சிரித்தபடி நடக்கிறார். கோபமும், இயலாமையும், வருத்தமும் கொண்ட மனிதராகக் கதை முழுதும் வருகிற சரவண வாத்தியார் கதையின் கடைசியில் மலர்ந்த மனத்துடன் வீட்டுக்குத் திரும்ப என்ன ரசாயனம் மாற்றம் நிகழ்ந்தது ? மனிதமே மலர்ந்தது.

**முடிவுரை**

வாழ்க்கையின் உயர்ந்தநிலை என்பது ஒருவரது செல்வச்செழிப்பினை வைத்து கணிக்கப்படுவதில்லை. அவர்கள் செய்கின்ற தான தர்மங்களைப் பொறுத்து அமைவதாகும் என்ற

உயரிய கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்தமைக்கு சங்க கால சமூகமும், நிகழ்கால சமூகமும் சான்றாக விளங்குகின்றன. சங்க காலங்களிலே மனிதநேயம் என்பது அவர்கள் வாழ்வியலில் ஒன்றாக இயல்பாகக் கலந்திருந்தது. தற்போதைய சமூகச்சூழலில் அது ஒரு தனிமனிதப்பண்பாகப் பார்க்கப்படும் அவல நிலை உள்ளது என்பது இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**சான்றெண் விள்க்கம்**

1. புறப்பொருள் வெண்பாமாலை - கரந்தைப்படலம்
2. திருக்குறள் - குறட்பா 212
3. நற்றிணை - 216:3 பாடல் வரிகள்
4. நற்றிணை 233:8-9 பாடல் வரிகள்
5. அப்பூதியடிகள் நாயனார் புராணம் பாடல் 1785
6. பாரதியார் கவிதைகள் பக். 136

**துணை நூற்பட்டியல்**

1. வரதராசனார், மு. திருக்குறள் உரை. சாரதா பதிப்பகம்.
2. மானிக்கம், அ. பன்னிரு திருமுறைகள் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம்.
3. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம்.
4. சுப்ரமணியன், ச. வே. சங்க இலக்கியம் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம்.
5. ஜானகிராமன், தி. சிறுகதைகள் - முழுத்தொகுப்பு, காலச்சுவடு பதிப்பகம்.